YISHUN SECONDARY SCHOOL
Subject :Tamil (1198)
Level & Stream: Sec 4 NA

| The Curriculum and Approaches to Learning | | Key Programmes / Competitions |
|---|---|---|
| தமிழ்மொழிப் புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் அடிப்படை மொழிதிறன்களைப் பெற தமிழ்மொழிக் கற்பித்தலில் பல்வேறு உத்திகளையும், கற்றல் பயிற்றுவளங்களையும், ஊடகங்களையும் மாணவர்களின் வயது மற்றும் அனுபவத்திற்கேற்ப வழங்கி மகிழ்வூட்டும் கற்றலை வழங்குதல். மாணவர்களின் ஆர்வ நிலையைத் தூண்டவும் அவர்களின் ஆற்றலை வளப்படுத்தவும் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பற்றிய தகவல்களைத் தகவல் தொழில்நுட்பத்தோடு இணைத்து தமிழ்மொழி கற்றலை வழங்குதல். | | பொங்கல் விழா, இரு வார தமிழ்மொழி விழா, வாசிப்புப் பயிற்சித்திட்டம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகப் போட்டிகள், தமிழ்மொழி மாதப் போட்டிகள் மற்றும் கற்றல் பயணங்கள். |
| **Term** | **Learning Experiences (chapter, activity)** | **Learning Outcomes & Assessment** |
| 1 | **<u>பாடநூல், பயிற்சிநூல் தொகுதி 1-4</u>**<br><br>**<u>படித்தல்:</u>**<br><br>பொறுப்புணர்வு, பண்டைத் தமிழர் உணவு முறை, வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக வாழ, வெற்றி நிச்சயம், புண்படுத்தாதே! புண்படாதே!, உரிமையும் கடமையும், ஆள் பாதி ஆடை பாதி, சிற்பமும் சித்திரமும், தேசிய சேவை, நாட்டுருவாக்கத்திற்கு இன நல்லிணக்கத்தின் பங்கு, வெற்றிக்கு வழிகாட்டி ஆகிய தலைப்புகளில் அமைந்த பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>சிறுகதை, நிகழ்வுக் கட்டுரை, விளக்கக் கட்டுரை, அலுவல் மின்னஞ்சல் ஆகியவற்றை எழுதுவர்.<br><br>**<u>இலக்கணம்:</u>** | • புதிய சொற்களின் பொருளை அறிவர்; பனுவலின் கருத்தைப் புரிந்துகொள்வர்.<br>• கவிதையைச் சரியாகவும் தெளிவாகவும் பொருள் விளங்குமாறும் பொருத்தமான தொனியுடனும் வாய்விட்டுப் படிப்பர்.<br>• தலைப்புக்கேற்ற கருத்துகளைச் சரியான முறையில் தொகுத்து எழுதவும், மின்னஞ்சல் எழுதும் நோக்கத்திற்கு ஏற்ப கருத்துகளை நிரல்படுத்தி எழுதவும் அறிவர்.<br><br>• பல்வேறு இலக்கணக் கூறுகளை அறிவதுடன் பிழையான வடிவத்தைக் கண்டறிந்து திருத்துவர். |

| | | |
|---|---|---|
| | ஆகுபெயர், இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், செயப்படுபொருள் குன்றியவினை, குன்றாவினை, நேர்கூற்று, அயற்கூற்று, ஆகிய, முதலிய, போன்ற, ஒரு, ஓர், சில, சிலர், பல, பலர், வல்லின மெய் மிகும், மிகா இடங்கள், குற்றியலுகர புணர்ச்சி, ஆகிய இலக்கணக்கூறுகளைக் கற்றுக்கொள்வர்.<br><br>**<u>இலக்கியம்:</u>**<br>புதினத் திறனாய்வு, நாடகம் – ஓர் அறிமுகம், நாடகத்தின் வகைகள், நாடக ஆசிரியர்கள் பற்றிய அறிவர்.<br>10 மரபுத்தொடர்கள், 8 இணைமொழிகள், பழமொழி, திருக்குறள்<br><br>**<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br>பயிற்சிநூலில் இடம்பெற்றுள்ள பனுவல்களைக் கேட்டுக் கருத்துகளை எழுத்துவழியாகவும் பேச்சுவழியாகவும் பரிமாறிக் கொள்வர். | • புதினத் திறனாய்வுக் குறித்து அறிவர். நாடகங்கள்பற்றியும் நாடக ஆசிரியர்களையும் அவர்களது படைப்புகளைப் பற்றியும் அறிந்துகொள்வர்.<br><br>• தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன்கள் – பல்லூடகங்களைப் பயன்படுத்திக் கற்றல்.<br><br>**<u>மதிப்பீடு:</u>**<br><br>மின்னஞ்சல் |
| 2 | **<u>பாடநூல், பயிற்சிநூல் தொகுதி 5,6</u>**<br>**<u>படித்தல்:</u>**<br>கண்டுபிடிப்புகள்,மாசில்லா உலகை உருவாக்குவோம்,அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள், காடுகளைக் காப்போம் ஆகிய தலைப்புகளில் அமைந்த படித்தல் பனுவல்களைப் படிப்பர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>மாணவர்கள் சம்பவக் கட்டுரை, கருத்துரைத்தல் கட்டுரை மற்றும் உறவு, தொழிற்முறை மின்னஞ்சல்களை எழுதுவர்.<br><br>**<u>இலக்கணம்:</u>**<br>குற்றியலுகரப் புணர்ச்சி மற்றும் தன்வினை பிறவினை பற்றி அறிவர்.<br><br>**<u>இலக்கியம்:</u>** | • செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் துறைகள் குறித்தும் அவற்றின் பயன்பாடு குறித்தும் கலந்துரையாடுவர்.<br><br>• முக்கியக் கருத்துகளை நிரல்படுத்தி இனியத்தொடர்களை இணைத்து எழுதும் திறன்களை மீண்டும் பயிற்சி செய்வர்.<br><br>• பல்வேறு இலக்கணக் கூறுகளை அறிவதுடன் பிழையான வடிவத்தைக் கண்டறிந்து திருத்துவர். |

| | | |
|---|---|---|
| | நாடகக் கூறுகள் மற்றும் நாடகத் திறனாய்வுப்பற்றி அறிவர்.<br>மரபுத்தொடர்களை அறிவதோடு இதுவரைக் கற்றுக்கொண்ட இணைமொழிகளை மறுபார்வை செய்வர்.<br>பழமொழி, திருக்குறள் ஆகியவற்றைப் படிப்பர்<br><br>**<u>கேட்டல் மற்றும் பேசுதல்:</u>**<br>தேர்வுக்கான கேட்டல் கருத்தறிதல் மாதிரிப் பயிற்சிகளைச் செய்வர். | • நாடகக் கூறுகளான தலைப்பு, கதைக்கரு, கட்டமைப்பு, கதாபாத்திரம், உரையாடல், காட்சியமைப்பு ஆகிய கூறுகள் குறித்து அறிந்து கலந்துரையாடுவர்.<br><br>• ஒலிப்பகுதியைக் கவனமாகக் கேட்டுக் கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• கருத்துப்பரிமாற்றத்தின்போது மற்றவர்களின் கருத்தைக் கேட்டுத் தங்கள் கருத்துகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பர்; தேவையேற்படின் தமது கருத்துகளில் தேவையான மாற்றத்தைச் செய்வர்; வகுப்பில் கலந்துரையாடுவர். தக்க சான்றுகளுடன் ஆமோதித்தோ மறுத்துரைத்தோ முடிவெடுப்பர்.<br><br>**<u>மதிப்பீடு:</u>**<br><br>தேசிய தேர்வு<br><br>தாள் 1 மற்றும் 2 |
| 3 | **<u>பயிற்சிகள்</u>**<br>**<u>படித்தல்:</u>**<br>முந்தைய ஆண்டுத் தேர்வுத் தாள்களையும் பிற பள்ளிகளின் தேர்வுத் தாள்களையும் பயிற்சி செய்வர்.<br><br>**<u>எழுதுதல்:</u>**<br>முந்தைய ஆண்டுத் தேர்வுத் தாள்களையும் பிற பள்ளிகளின் தேர்வுத் தாள்களையும் பயிற்சி செய்வர். | • பல்வேறு திறன்களைப் பெற மீண்டும் பயிற்சிகளில் ஈடுபடுவர்.<br>• தேர்வுக்குத் தயாராகுவர்.<br><br>**<u>மதிப்பீடு:</u>**<br><br>தேசிய தேர்வு – வாய்மொழி மற்றும் கேட்டல் |

<table>
<tr><td></td><td><u>இலக்கணம்:</u><br>உயர்நிலை 1இலிருந்து கற்றுக்கொண்ட இலக்கணக்கூறுகளைப் பயிற்சித்தாள்களின் மூலம் மறுபார்வை செய்து பயிற்சி செய்வர்.<br><br><u>இலக்கியம்:</u><br>மரபுத்தொடர்கள் இணைமொழிகளுக்கானப் பயிற்சிகளைச் செய்வர்<br><br><u>கேட்டல்\நோக்கல் மற்றும் பேசுதல்:</u><br>கேட்டல் கருத்தறிதல் தேர்வுத் தாள்களையும் வாய்மொழித் தேர்வுத் தாள்களையும் செய்வர்.</td><td></td></tr>
<tr><td>4</td><td><u>பாடத்திருப்பம், மீள்ப்பார்வை</u><br><u>படித்தல்:</u><br>கடந்த ஆண்டு தேர்வுத் தாள்கள், பிற பள்ளி தேர்வுத் தாள்கள் ஆகியவற்றிலுள்ள படித்தல் பனுவல்களைப் படிப்பர்.<br><u>எழுதுதல்:</u><br>தேர்வுப் பயிற்சியாக சில எழுதுதல் பயிற்சியை மேற்கொள்வர்.<br><br><u>இலக்கணம்:</u><br>தேர்வுப் பயிற்சியாகப் பிழை திருத்தப் பயிற்சிகளைச் செய்வர்.<br><br><u>இலக்கியம்:</u><br>மரபுத்தொடர்கள், இணைமொழிகள் ஆகியவற்றுக்கான பயிற்சித்தாள்களைச் செய்வர்.</td><td>• மாணவர்கள் இதுவரைப் பெற்ற திறன்களை மறுபார்வையிடுவர். மீண்டும் பயிற்சி செய்வர்.<br><br><u>மதிப்பீடு:</u><br><br>தேசிய தேர்வு</td></tr>
</table>